நாடார்களுக்குத் தனியிடம், ஹரிஜனங்களுக்குத் தனியிடமென்று இருக்கிறது. கிறிஸ்தவர்களாக ஆகி விட்டதில் அவர்களிடம் மாறுதல் ஒன்றுமில்லாமலிருப்பதால், கன்னியாகுமரி ஜில்லாவில் கிறிஸ்தவர்களாக உள்ளவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கும் பொழுது ஏன்மற்ற ஜில்லாவிலுள்ளவர்களுக்கும் கொடுக்கக் கூடாது என்றுகேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எல்லா மதங்களும், கிறிஸ்தவ மதமும், புனிதமான மதங்கள்தான். ஆனால் கனம் அங்கத்தினர் சொல்லியதிலிருந்து அந்த மதத்தைக் கொஞ்சம் குறைத்துப் பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் அந்த மதத்தில் வெவ்வேறாகப் பிரித்து வைக்கிறார்கள் என்று சொன்னாலே அதுதானே அர்த்தம்? கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் கிறிஸ்தவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கிறார்கள். காரணம், அந்தப் பகுதியைத் திருவனந்தபுரம் ராஜ்யத்திலிருந்து இணைக்கும்பொழுது என்ன சலுகைகள் கொடுக்கப்பட்டனவோ அவற்றையெல்லாம் கொடுக்கவேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆகவே தான், அந்த முறையிலே கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம் : அந்த ஜில்லாவில் மாத்திரம் அந்தச் சலுகைகள் கொடுக்கப்படும்பொழுது, இதர ஜில்லாக்களுக்கும் ஏன் அந்தச் சலுகைகள் கொடுக்கக்கூடாது என்பதுதான் என் கேள்வி. ஆகவே, கனம் முதலமைச்சர் அவர்கள் இதை சிம்பதடிக் ஆகக் கன்ஸிடர் பண்ணவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

House-sites for Backward Communities

* 321 Q.—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to provide house-sites to Backward Communities who do not have house-sites; and

(*b*) if so, the particulars thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) A statement[a] is placed on the Table of the House.

திரு. க. ர. நல்லசிவம் : அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய பதில் கொள்கைப் படலமாகவே இருக்கிறது. வருகின்ற காலத்தில் நிலமில்லாது இருக்கக்கூடியவர்களுக்கு வீடுகள் கொடுக்கக்கூடியதைப்பற்றித்தான் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது சமூகத்திலே பின்தங்கியவர்களாக, பொருளாதாரத் துறையிலே பின்தங்கியவர்களாக உள்ளவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். புறம்போக்கு நிலங்களிலே அவர்கள்

[a] Printed as Appendix IV on pages 102-103.

2nd November 1966]

குடியிருந்து வருகிருர்கள். அவர்களையெல்லாம் ரெவின்யூ துறையிலும், பெருவழித் துறையிலும் உள்ளவர்கள் வெளியேற்று வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிருர்கள். கொள்கையை நிறை வேற்றிக்கொள்வதைப் பின்னுல் வைத்துக்கொள்ளட்டும். ஆனுல், தற்காலிகமாக அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்படாமல் இருப்பதற்கு, அவர்களுடைய குடிசைகள் அகற்றப்படாமல் பாது காப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பொதுஜனப் போக்குவரத்துக்கு இடை யூருக ஏதாவது வீடுகள், ரோடுகளில், ஏரிகளில், குளங்களில் இருந்தால் அவற்றிலுள்ளவர்களைத்தான் வெளியேற்ற வேண்டி யிருக்கும். ஆனுல், ரொம்ப காலமாக நிலத்திலே உழுது பயிரிட்டு, தண்டத் தீர்வை கட்டியிருந்தாலும், பல வருஷங்களாகக் குடியிருந் தாலும் அவற்றையெல்லாம் பார்த்துச் செய்யவேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, பல பேர்களுக்கு பட்டாக்கள் கொடுக்கப்படுகின்றன என்பது கனம் அங்கத் தினருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : கொடுக்கப்பட்டுள்ள அறிக்கை யில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட 10 இடங்கள் தேர்ந்தெடுக் கப்பட்டிருக்கின்றன என்றும், இதற்காக ரூ. 25 லட்சம் செலவாகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 10 இடங்கள் எவை யென்று தெரிந்து கொள்ளலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த இடங்களின் பெயர்கள் என்னி டத்தில் இல்லை. இதைப்பற்றிக் கலெக்டர்கள் ரிப்போர்ட் அனுப்பி வைத்திருக்கிருர்கள். The report is under Scrutiny.

திரு. இராம. அரங்கண்ணல் : பத்து இடங்களைப்பற்றிய தகவல் இன்னும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அப்படியானுல் தகவல் கிடைத்த பிறகு என் போன்றவர்களுக்குத் தனியாக அந்த இடங்களைப்பற்றிய விவரங்களை அனுப்பி வைப்பார் களா ?

கனம் திரு. பூ. கக்கன் : தகவல் கிடைக்கவில்லை என்று சொல்ல வில்லை. இப்பொழுது என்னிடத்தில் இல்லை என்றுதான் சொன்னேன்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது பல ஆண்டுகளாக இருந்தவர்கள் பாதிக்கப் படமாட்டார்கள். வீடுகளுக்குப் பட்டாக்கள் கொடுக்கப்படும் என்று சொன்னுர்கள். உசிலம்பட்டியில் கண்மாய்க் கரையிலே பாதிப்பு இல்லாத இடங்களில் இருந்த 100 கடைகள் இடித்து நொறுக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற விவரம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : உசிலம்பட்டியைப் பொறுத்த வரையில் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும், அங்கிருந்து தேனி, கம்பம் போன்ற இடங்களுக்குப் போகவேண்டுமென்று சொன்னால் டர்னிங் போய்தான் போகவேண்டியிருக்கிறது. ஆகவே, பொது ஜனப் போக்குவரத்துக்கு எங்கே இடையூறு இருக்கிறதோ அங்கே தான் அப்புறப்படுத்துவார்கள்.

திரு. க. ர. நல்லசிவம் : பொதுஜனப் போக்குவரத்திற்கு இடைஞ்சல் செய்யவேண்டுமென்று வைத்துக்கொண்டிருப்பவர்களைப் பற்றி நான் சொல்லவில்லை. இடைஞ்சல் இல்லாத இடங்களில்கூட ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் ஆட்சேபக் குறிப்பு எழுதி விட்டால் உடனே அப்புறப்படுத்திவிடுகிறார்கள். ஆகவே, அப்படியில்லாமல் மிக நெருக்கடியான இடங்களிலேயிருந்து வெளியேற்றுவதற்கும், அவர்களுக்கு மாற்று இடங்கள் கொடுப்பதற்கும், போக்குவரத்து ஓரளவுக்குப் பாதகம் இல்லாமல் போகமுடியும் என்ற இடங்களிலே வெளியேற்றாமல் பாதுகாப்புக் கொடுப்பதற்கும், ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் பொதுவாகப் பேசுகிறார்கள். எங்காவது அந்த மாதிரிப் பொதுஜன போக்குவரத்து இடையூறு இல்லாத இடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் இருந்தால் அதைப்பற்றித் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஏரல் பாலம்

** 322 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி ஜில்லா, ஏரல் பாலத்தின் தென்கரை அப்ரோச் ரோடு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டபடி அமைக்கப்படுகிறதா ?

(இ) இல்லை எனில், காரணமென்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The original alignment of the South Approach road has been revised. The original alignment cut across costly wet lands and split them up. The revised alignment is shorter in length and avoids acquisition of costly occupied wet lands. It is laid on a flood bank on land belonging to Government. Adequate safeguards are being taken by providing wider blacktopped surface at curves, and hand-rails and safety guards with painted tar drums at intervals.

** 323 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி ஜில்லா ஏரல் பாலத்தின் உத்தேசச் செலவென்ன ?